

# SIVAPURANAM
## MISSION

www.Sivapuranam.in

திருச்சிற்றம்பலம்

# 18. குயிற்பத்து

(தில்லையில் அருளியது)

ஆத்தும இரக்கம்

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)



# திருச்சிற்றம்பலம்



கீதம் இனிய குயிலே கேட்டியேல்
எங்கள் பெருமான்
பாதம் இரண்டும் வினவில் பாதாளம்
ஏழினுக்கு அப்பால்
சோதி மணிமுடி சொல்லிற் சொல்இறந்து
நின்ற தொன்மை
ஆதிகுணம் ஒன்றும் இல்லான் அந்தம்
இலான்வரக் கூவாய். 1





ஏர்தரும் ஏழ்உலகு ஏத்த எவ்உருவும்.
தன்னுருவாய்
ஆர்கலிசூழ் தென்இலங்கை அழகுஅமர்
வண்டோதரிக்குப்
பேர்அருள் இன்பம்அளித்த பெருந்துறை
மேயபிரானைச்
சீரிய வாயால் குயிலே தென்பாண்டி
நாடனைக் கூவாய்.





நீல உருவிற் குயிலே நீள்மணி
மாடம் நிலாவும்
கோல அழகில் திகழும் கொடிமங்கை
உள்ளுறை கோயில்
சீலம் பெரிதும் இனிய திருஉத்தர
கோச மங்கை
ஞாலம் விளங்க இருந்த நாயகனை
வரக் கூவாய்.

3





தேன்பழச் சோலை பயிலும் சிறுகுயிலே
இது கேள்நீ
வான்பழித்து இம்மண் புகுந்து மனிதரை
ஆட்கொண்ட வள்ளல்
ஊன்பழித்து உள்ளம் புகுந்து என்உணர்வு
அதுவாய ஒருத்தன்
மான்பழித்து ஆண்டமென் நோக்கிமணாளனை
நீவரக் கூவாய்.





சுந்தரத்து இன்பக் குயிலே சூழ்சுடர்
ஞாயிறுபோல
அந்தரத்தே நின்றுஇழிந்து இங்கு அடியவர்
ஆசைஅறுப்பான்
முந்தும் நடுவும் முடிவும் ஆகிய
மூவர் அறியாச்
சிந்துரச் சேவடியானைச் சேவகனை
வரக் கூவாய்.





இன்பம் தருவன் குயிலே ஏழ்உலகும்
முழுது ஆளி
அன்பன் அமுதுஅளித்து ஊறும் ஆனந்தன்
வான்வந்த தேவன்
நன்பொன் மணிச்சுவடுஒத்த நற்
பரிமேல் வருவானைக்
கொம்பின் மிழற்றும் குயிலே கோகழி
நாதனைக் கூவாய்.





உன்னை உகப்பன் குயிலே உன்துணைத்
தோழியும் ஆவன்
பொன்னை அழித்த நன்மேனிப் புகழில்
திகழும் அழகன்
மன்னன் பரிமிசை வந்த வள்ளல்
பெருந்துறை மேய
தென்னவன் சேரலன் சோழன் சீர்ப்புயங்கன்
வரக் கூவாய்.



வாஇங்கே நீ குயிற்பிள்ளாய் மாலொடு
நான்முகன் தேடி
ஓவிஅவர் உன்னி நிற்ப ஒண்தழல்
விண்பிளந்து ஓங்கி
மேவி அன்று அண்டம் கடந்துவிரிசுடராய்
நின்ற மெய்யன்
தாவி வரும் பரிப்பாகன் தாழ்சடையோன்
வரக் கூவாய்.





கார்உடைப் பொன்திகழ் மேனிக் கடிபொழில்
வாழுங் குயிலே
சீர்உடைச் செங் கமலத்தில் திகழ்உருபங்கு
ஆகிய செல்வன்
பாரிடைப் பாதங்கள் காட்டிப் பாசம்
அறுத்துஎனை ஆண்ட
ஆர்உடை அம்பொனின் மேனி அமுதினை
நீவரக் கூவாய்.







கொந்து அணவும்பொழில் சோலைக் கூங்குயிலே
இது கேள்நீ
அந்தணன் ஆகிவந்துஇங்கே அழகிய
சேவடி காட்டி
எம்தமர் ஆம்இவன் என்றுஇங்கு என்னையும்
ஆட்கொண்டருளும்
செந்தழல் போல் திருமேனித் தேவர்பிரான்
வரக் கூவாய்.



ஸ்ரீ மாணிக்கவாசகர்